கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 258/2021 வா.சா.1 வஞ்சிமுத்து

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 16.09.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1)இவ்வழக்கில் வழக்குரை விவரமும் சொத்து விவரமும் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து விவரத்தை 2 அயிட்டங்களாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அயிட்டம் 1ல் முதல் பத்தியில் 2 .40 ஏக்கர் பூமியும் 2 ம் பத்தியில் 6 செண்ட் தட பாத்தியமும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். முதலில் குறிப்பிடப்பட்டுள்ள 2.40 ஏக்கர் பூமி தான் என் பெற்றோருக்கு ஆதியில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் பெற்றோருக்கு பாத்தியப்பட்ட 2.40 ஏக்கர் பூமிக்கு எவ்வித தடமும் இல்லாமல் இருந்தது என்றால் சரியல்ல.

2) வா.சா.ஆ.2 கிரய ஆவணப்படி தான் என் பெற்றோர் பிரதிவாதிகளிடமிருந்து தடபாத்தியம் எழுதி வாங்கினார் என்றால் சரிதான். மேற்சொன்ன பூமிக்கு தடபாத்தியம் இல்லாததால் தான் அவ்வாறு கிரயம் பெற்றார் என்றால் சரியல்ல . அனுபவத்தில் இருந்த தடத்திற்கு ஆவணம் ஏற்படுத்தவே வா.சா.ஆ.2 ஏற்படுத்தப்பட்டது. வா.சா. ஆ.2 ஆவணத்தில் தடம் பணம் கொடுத்து கிரயம் பெறப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணப்படி கிரயம் பெற்ற சொத்தை தான் 2 அயிட்ட சொத்தாக என் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3) எனக்கு ஆதியில் பாத்திப்பட்ட பூமி புல எண் 79/B 2F மற்றும் 80/7 ஆகும் என்றால் சரிதான். மேற்படி பூமிகளுக்கு மேல் புறமும் தென்புறமும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பூமி

உள்ளது என்றால் சரிதான். மேற்படி பூமிகளுக்கு கிழபுறமும் வடபுறமும் மூன்றாம் நபர் பூமி உள்ளன என்றால் சரிதான். நான் மேற்படி பூமி அமைப்பை காட்டும் விதமாக வழக்குரையுடன் மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4) நான் இவ்வழக்கில் 4 விதமான பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு பூமி அமைப்பை பார்வையிட்டு நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் முதல் பரிகாரத்தில் ஏரியை மீண்டும் அமைத்து தர வேண்டும் என கோரியுள்ள நிலையில் அத்தகைய ஏரி எங்கு அமைந்திருந்தது என்றோ எப்படி அமைக்கப்பட்டிருந்தது என்றோ நீ.சா.ஆ. 1 அறிக்கை மற்றும் நீ.சா.ஆ.2 வரைபடம் ஆகியவற்றில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான் . ஆணையர் வரும் முன்பே அது அளிக்கப்பட்டிருந்ததால் காண்பிக்கப்படவில்லை மேலும் நாங்கள் ஏரி இருந்த இடத்தை காண்பித்தும் ஆணையர் தன் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

5) ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது பிரதிவாதிகளோ அவர்களது வழக்கறிஞரோ அங்கு இல்லை என்றால் சரிதான். வழக்குரையில் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைப்படத்திலும் ஏரி எங்கு அமைந்திருந்தது என்றோ எப்படி அமைக்கப்பட்டிருந்தது என்றோ காட்டவில்லை என்றால் சரிதான்.

6) நான் 3ம் பரிகாரமாக பிரதிவாதிகள் வழக்கு 2 ம் அயிட்ட தடத்திற்கு தென்புறம் கிழமேலாக முட்கம்பி வேலி போடக்கூடாது என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு 2ம் அயிட்ட தடத்திற்கு தென்புறம் பிரதிவாதி தனிப்பட்ட பூமி என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரிடம் பிரதிவாதிகள் முட்கம்பி வேலி அமைக்க முட்படுவதாக சொல்லும் இடத்தை நான் காண்பிக்கவோ அவர் தன் அறிக்கை மற்றும் வரைப்படத்தில் குறிப்பிடவோ இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

7) நான் 4 ம் பரிகாரமாக பிஏபி பாசன வாய்க்கால் மூலம் தண்ணீர் கொண்டு செல்வதை தடுக்க கூடாது என கோரியுள்ளேன் என்றால் சரிதான். பிஏபி வாய்க்கால் மூலம் ஆயக்கட்டில் சேர்ந்த பூமிகளுக்கு நீர்பாய்ச்சுவதை யாரும் தடை செய்யமுடியாது என்றால் சரிதான். எனது மாதிரி வரைப்படத்தில் நான் என் பூமிக்கு வரும் பிஏபி வாய்க்காலை காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. நீ.சா.ஆ. 2 வரைப்படத்தில் நீல நிறத்தில் காட்டியுள்ளது தான் தென்வடலாக செல்லும் பிரதான பிஏபி வாய்க்கால் என்றால் சரிதான். அந்த பிரதான வாய்க்கால் வழக்கு வண்டித்தடத்தில் நிலத்தடி வழியாக கடந்து செல்கிறது என்றால் சரிதான். நீ.சா.ஆ. 2 வரைப்படத்தில் எனக்கு வரும் வாய்க்காலை G ஒற்றைக்கல் வாய்க்கால் என்று ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான் . அந்த ஒற்றை கல் வாய்க்கால் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் உரியது. மேற்படி ஒற்றைக்கல் வாய்க்கால் அழிமாட்டம் செய்யப்படதாக நீ.சா.ஆ. 2 வரைப்படத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட போது ஒற்றைக்கல் வாய்க்கால் இருந்தது அதன் பின்னிட்டு தான் பிரதிவாதிகள் அதனை அழித்துவிட்டார்கள்.

8) நான் 2 ம் பரிகாரமாக 2 ம்அயிட்ட வண்டிதடத்தை நான் பயன்படுத்துவதை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என கோரியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணத்திலேயே வழக்கு வண்டி தடத்தை இரு தரப்பும் எவ்வாறு அனுபவிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு வண்டிதடத்தில் பயன்படுத்தும் உரிமை மட்டுமே எனக்கு உள்ளது என்றும் பூமி பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்திலேயே வழக்கு வண்டிதடத்தின் நான்கு புறத்தில் உள்ள அளவீடுகளும் பரப்பளவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது வழக்கு வண்டிதடத்தின் அளவுகளை அளந்து பார்த்தார் என்றால் சரிதான். அனுபவப்படி பார்த்தார் . நீதிமன்ற ஆணையர் தான் அளந்து பார்த்த அளவுகளை தன் அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணப்படி மேற்படி வண்டிதடத்தில் மேல் புறமும் கிழபுறமும் தென்வடம் 13 லிங்க்ஸ் அகலம் மட்டுமே எனக்கு நடை பாத்தியம் உள்ளது என்றால் சரிதான். வழக்கு வண்டித்தடம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது .

10) வா.சா.ஆ. 3 சிட்டா என்னுடைய பூமிக்கு மட்டுமானது என்றால் சரிதான். பிரதிவாதிகள் தான் எங்கள் பூமியை நாங்கள் அனுபவிக்க வழியில்லாமல் இருப்பதைப் பார்த்து வா.சா. ஆ. 2 ஆவணம் மூலம் வண்டித்தடம் கொடுத்தார்கள் என்றும் ஆனால் நான் தற்போது வா.சா.ஆ. 2 ஆவணத்திற்கு முரண்பட்டு உரிமைகள் கோரி இவ்வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா. ஆ. 2 ஆவணப்படி எனக்கு உரிய வண்டித்தடம் 13 லிங்க்ஸ் அகலம் மட்டுமே என்றும் ஆனால் நீதிமன்ற ஆணையர் அறிக்கைப்படி வண்டித்தடம் 12 அடி எனக்குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் இதில் இருந்து நான் என்உரிமைக்கும் அதிகமாக பிரதிவாதிகளின் பூமியை ஆக்கிரமித்து பயன்படுத்தி வருவது தெரிகிறது என்றும் அதனை சாதகமாக்கி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11) வா.சா. ஆ. 2 ஆவணமே வண்டித்தடத்தின் அளவீடுகளை தெளிவுற குறிப்பிடுகிறது என்றும் பிரதிவாதிகள் பூமியில் காணப்படும் பனைமரத்துண்டு வரை அதில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணப்படி எனக்கு நடைபாத்தியம் மற்றும் கால்நடை கொண்டு செல்லும் பாத்தியம் மட்டுமே உள்ளது என்றும் இயந்திர வாகனங்கள் கொண்டு செல்லும் பாத்தியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான்

சட்ட விரோதமாக உரிமைகள் ஏற்படுத்திக்கொள்ள தவறாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி